# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

2016 பிறந்தவர்கள்

**பின்வரும் 5 குறள்களை மட்டும் ஒப்பித்தல் செய்தல். குறள்களுக்கான பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.**

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (குறள் 131)

ஒழுக்கம் எல்லாப் பெருமையும் தருவதாகும்; ஆதலால், அந்த ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் மேலானதாகப் போற்றிக் காக்கப்படும்.

2. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (குறள் 100)

இனிய சொற்கள் இருக்கையில் கடுமையான சொற்களைப் பேசுவது, கனி இருக்கும்போது காயைப் பறித்துத் தின்பது போன்ற பயனற்ற செயலாகும்.

3. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் (குறள் 26)

செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியோர்; செய்வதற்கு அத்தகைய அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர் ஆவர்.

4. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. (குறள் 99)

இனிய சொற்களையே பேச வேண்டும். கடுமையான சொற்களைத் தவிர்க்க வேண்டும்.

2016 பிறந்தவர்கள்

5. **எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.** (குறள் 110)

எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு; ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வில்லை.

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.